**SC NO.27/2020** **Date:07.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. யுவராஜ் என்ற Pw2 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. யுவராஜ்**

**த/பெ, - திரு. மகாலிங்கம்**

**வயது - 27/2025**

**தொழில் - தனியார் நிறுவனத்தில் தொழில்நுட்பவல்லுநர்**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஸ்ரீபெரும்பத்தூர் வட்டம், கருமாகழனி கிராமம், நத்தம் சாலை, எண்.241 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் தொழில்நுட்ப வல்லுநராக வேலை செய்து வருகிறேன். அரசு தரப்பு சாட்சிகளான விஸ்வநாதன், நாகராஜ் ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் இரவு மாம்பக்கத்தில் உள்ள நான் வேலை செய்யும் நிறுவனத்திலிருந்து கிளம்பி 8 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். நான் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு கொண்டிருந்த போது ஸ்ரீபெரும்பத்தூர் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்தார்கள். ஜே.கே கல் குவாரியில் யாரையோ கொலை செய்துவிட்டார்கள் என்றும் அந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றும் கேட்டார்கள். என்னை விசாரிக்க வேண்டுமென்று ஸ்ரீபெரும்பத்தூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். சம்பவத்தை பற்றி எதுவும் தெரியுமா என்று போலிசார் கேட்ட நான் தெரியாது என்று சொல்லிவிட்டேன். 3 மணி நேரம் என்னை காத்திருக்க வைத்துவிட்டு பின்பு என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27 4 2019 ஆம் தேதி காலை 8 மணிக்கு நீங்கள் கம்பெனி வேலைக்கு சென்று விட்டு மாலை 4:30 மணிக்கு உங்கள் வீட்டிற்கு வந்த போது உங்கள் அம்மா செல்வம் கிட்னி பெயிலினால் இறந்து விட்டதாக தகவல் சொன்னதின் பேரில் ராஜ்குமார் என்பவர் உங்கள் வீட்டிற்கு வந்து இறந்த செல்வத்திற்கு சுங்குவார்சத்திரம் சென்று மாலை வரும் வாங்கி வருவதாக சொல்லிவிட்டு உங்களுடைய டிஎன் 87 29 99 பதிவு எண் உள்ள pulsar பைக்கை வாங்கி சென்றதாகவும் மாலை 6:30 மணிக்கு ராஜ்குமார் வீட்டின் பின்னாடி இருந்து சத்தம் கேட்டவுடன் நீங்களும் உங்க அம்மாவும் அங்கு ஓடி சென்று பார்த்ததாகவும் நாகராஜன் சத்தம் கேட்டு அந்த ஓடி வந்தார் என்றும் அப்போது வேப்ப மரத்தடியில் ராஜ்குமார் கையில் கட்டி வைத்துக்கொண்டு சபரிநாதனை வெட்டினான் என்றும் அருகில் வெங்கடேசன் என்று கொண்டுதான் என்றும் சபரிநாதன் என்னை வெட்டாதீங்க என்று சத்தம் போட்டுக்கொண்டு ஓடினார் என்றும் அவர் பின்னாடியே ராஜ்குமார் வெங்கடேசன் விடாமல் துரத்தி சென்றார்கள் என்றும் நீங்கள் பயந்து கொண்டு உங்கள் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டதாகவும் கொஞ்ச நேரம் கழித்து ராஜ்குமாரும் வெங்கடேசனும் அவர்களுடைய டிரஸ்ஸில் ரத்தக்கரையுடன் வந்து உங்களுடைய பைக்கை நிறுத்திவிட்டு சென்றார்கள் என்றும் பின்பு சபரிநாதன் இவர்கள் தான் வெட்டி கொலை செய்திருப்பது தெரிந்து கொண்டீர்கள் என்றும் இது சம்பந்தமாக திரும்பதூர் காவல் ஆய்வாளர் ஆய்வாளர் அவர்கள் உங்களை விசாரித்ததில் சம்பவத்தை நேரில் பார்த்ததை கூறிவிட்டு தற்பொழுது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணைஇல்லை.